தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

05.11.2012 P.M

06.11.2012 A.M

## ஆவின் பால் பொருள்கள் பண்டிகைக் கால சிறப்பு விற்பனை ரூ.3.5 கோடி



பண்டிகைக் காலத்தையொட்டி, அறிமுகப்படுத்தப்பட்ட ஆவின் புதிய இனிப்பு வகைகள் மற்றும் பால் பொருள்கள் சிறப்பு விற்பனையாக ஆயுத பூஜையில் இருந்து நவம்பர் 4ம் தேதி வரை ரூ. 3 கோடியே 50 லட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது என பால்வளத்துறை அமைச்சர் மாதவரம் மூர்த்தி தெரிவித்தார்.

பால் பொருள்கள் தயாரிக்கப்படும் அம்பத்தூர் பால்பண்ணைக்கு அமைச்சர் மாதவரம் மூர்த்தி, திங்கள்கிழமை நேரில் சென்று ஆய்வு செய்தார்.

பண்டிகாலத்தையொட்டி அறிமுகப்படுத்தப்பட்ட சிறப்பு இனிப்பு வகைகளான முந்திரி அல்வா, முந்திரி கேக், சாக்லேட் பர்பி, நட்ஸ் அல்வா, டிரைபுரூட்ஸ் பர்பி ஆகியவைகளின் தரம் மற்றும் சுவை குறித்து ஆய்வு செய்தார்.

தொடர்ந்து அவர் கூறியது:

ஆயுதபூஜை பண்டிகை தினத்தில் இருந்து நவம்பர் 4ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) வரை ஆவின் புதிய அறிமுக இனிப்பு வகைகளின் சிறப்பு விற்பனை மட்டும் ரூ.3 கோடியே 50 லட்சத்தை எட்டி

உள்ளது. இதில், ஏற்கெனவே வழக்கமான பால் பொருள் விற்பனையைத் தவிர்த்து, சிறப்பு விற்பனையில் மட்டும் இந்த இலக்கு எட்டப்பட்டுள்ளது.

இனி வரும் தீபாவளி, புத்தாண்டு, பொங்கல் போன்ற பண்டிகை காலங்களில் ஆவின் பால் பொருள்கள், இனிப்பு வகைகள், ஐஸ் கிரீம்கள் தங்குதடையின்றி மக்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார் மூர்த்தி.

இந்த ஆய்வின்போது, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத்துறைச் செயலர் ககன்தீப்சிங் பேடி, ஆவின் நிர்வாக இயக்குநர் தா.கி. ராமச்சந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கோழி முட்டை , இறைச்சிக்கு தடையை நீக்கியது கேரளம்**

விதிக்கப்பட்டிருந்த தடையை அந்த மாநில அரசு விலக்கிக் கொண்டுள்ளதாக தகவல் வந்துள்ளது என்று நாமக்கல் மாவட்ட ஆட்சியர் டி.ஜகந்நாதன் தெரிவித்தார்.

இதுகுறித்து திங்கள்கிழமை அவர் கூறியது: பெங்களூரில் ஏற்பட்ட பறவைக் காய்ச்சல் பாதிப்பை அடுத்து, கடந்த அக்டோபர் 29ஆம் தேதி முதல் ஒரு வாரமாக தமிழகம் உள்பட வெளி மாநில கோழி முட்டைகள், இறைச்சி ஆகியவற்றுக்கு கேரள மாநிலத்தில் தடை விதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, தமிழகத்திலிருந்து கோழி முட்டைகள், இறைச்சியை ஏற்றிச் சென்ற லாரிகள் கேரள எல்லை சோதனைச் சாவடிகளில் தடுத்து நிறுத்தப்பட்டன.

இதனால், தமிழக கோழிப் பண்ணையாளர்களுக்கு ஏற்பட்ட வர்த்தகப் பாதிப்பை அடுத்து, தமிழகத்தில் பறவைக் காய்ச்சல் பாதிப்புகள் இல்லை என்பதை தமிழகக் கால்நடைத் துறை செயலர் மூலமாகவும், கால்நடை பராமரிப்புத் துறை சான்றுகள் வாயிலாகவும் கேரள அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது.

5th nov 2012 P.M

**வாழை சாகுபடி தொழில்நுட்ப கருத்தரங்கு**

தேனி அருகே பழனிசெட்டிபட்டியில் தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை சார்பில் ஞாயிற்றுக்கிழமை வாழை சாகுபடி தொழில்நுட்பக் கருத்தரங்கு நடைபெற்றது.

வேளாண் துறை அமைச்சர் செ.தாமோதரன் தலைமை வகித்தார். மாவட்ட ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமி வரவேற்றார். பழனிசெட்டிபட்டி பேரூராட்சித் தலைவர் பாலசுப்பிரமணி முன்னிலை வகித்தார். நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். ஏற்றுமதி

தரத்திலான வாழை சாகுபடி, புதிய தொழில்நுட்பம், உள்கட்டமைப்பு வசதி, சந்தைப்படுத்துதல் ஆகியவை குறித்து தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர் துறை ஆணையர் சந்தோஷ்பாபு, கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக துணைவேந்தர் கே.ராமசாமி ஆகியோர் பேசினர்.

வாழை சாகுபடியில் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, அதிக மகசூல் பெற்ற விவசாயிகளுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

## திராட்சை ஆராய்ச்சி நிலையம் அமையவுள்ள இடத்தில் வேளாண்மைத்துறை அமைச்சர் ஆய்வு

தேனி மாவட்டம், ராயப்பன்பட்டி அருகே திராட்சை ஆராய்ச்சி நிலையம் அமையவுள்ள இடத்தை வேளாண்மைத்துறை அமைச்சர் தாமோதரன் ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் 10 ஆயிரம் ஏக்கரில், பச்சை விதையில்லா மற்றும் விதையுடன் கூடிய பன்னீர் கருப்பு ஆகிய 2 வகையான திராட்சை பயிர்கள் சுமார் 100 ஆண்டுகளாக விவசாயிகளால் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

திராட்சை சாகுபடியில் புதிய தொழில்நுட்பம், நோய்த் தடுப்பு முறைகள், பருவகால மாற்றத்தை எதிர்கொள்வது, பூச்சிகொல்லி மருந்தை பயன்படுத்தும் முறைகள் குறித்து, விவசாயிகள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வந்தனர். இவற்றிலிருந்து மீள, விவசாயிகள் நீண்டநாளாக திராட்சை ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்து வந்தனர்.

கடந்த ஆட்சியில் ஆராய்ச்சி நிலையத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால், திட்டம் நிறைவேற்றப்படவில்லை. தற்போது ஆண்டிபட்டி எம்எல்ஏ தங்க தமிழ்செல்வன் ஆராய்ச்சி நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டு வந்தார்.

இதையடுத்து, ஆராய்ச்சி நிலையம் அமைக்கத் தேவையான 25 ஏக்கர் நிலம், பொதுப்பணித் துறையிடமிருந்து, வேளாண்மைத் துறைக்கு மாற்றப்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை ராயப்பன்பட்டி வந்த வேளாண்மைத்துறை அமைச்சர் தாமோதரன், சண்முகாநதி நீர்த்தேக்கம் அருகே திராட்சை ஆராய்ச்சி நிலையம் அமைக்கத் தேர்வு செய்யப்பட்ட இடத்தைப் பார்வையிட்டார்.

பின்னர், வளாகத்தில் புதியரக திராட்சை செடியை அவர் நடவு செய்தார்.

அப்போது, ஆராய்ச்சி நிலையத்துக்குத் தேவையான அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கவிருப்பதாகவும், அதற்காக முதற்கட்டமாக ரூ. 10 கோடி நிதி அரசால் ஒதுக்கப்பட உள்ளதாகவும் தங்க. தமிழ்செல்வன் எம்எல்ஏ தெரிவித்தார்.

நகராட்சித் தலைவர் டி.சிவக்குமார் உடன் இருந்தார்.

**வேளாண்மை பொருள்கள் பதனிடல் தொழில்நுட்பப் பயிற்சி**

சென்னையில் உள்ள உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி சார்பில் டிசம்பர் 1-ம் தேதி முதல் 31-ம் தேதி வரை வேளாண்மை பொருள்கள் பதனிடல் தொழில்நுட்பம் குறித்து பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

வேளாண்மை பொருள்களை உற்பத்திக்கு பிறகு முறையாக பதப்படுத்தும் தொழில்நுட்பம் குறித்து வேளாண்மை துறையில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு தெரியாததால் ஆண்டுதோறும் ரூ.1 லட்சம் கோடி வேளாண்மை உற்பத்தி பொருள்கள் விரயம் ஆகின்றன.

இந்தியா தானியம் மற்றும் பருப்பு உற்பத்தியில் முதலிடத்திலும், காய்கறி மற்றும் பழ உற்பத்தியில் இரண்டாம் இடத்திலும், எண்ணெய் வித்துப் பயிர்கள் உற்பத்தியில் ஐந்தாம் இடத்திலும் உள்ளது.

எனவே, அறுவடைக்குப் பின் தானியங்களை முறையாக பதப்படுத்துதல், எலிகள் கட்டுப்பாடு, நவீன சேமிப்பு முறைகள், பயிறு வகைகளை பதப்படுத்துதல், மதிப்பூட்டப்பட்ட தானியங்கள் மற்றும் பயிறு பொருள்கள் தயாரிப்பு, சோயா, பால் மற்றும் பன்னீர் தயாரிப்பு, காய்கறிகள் பதப்படுத்துதல், பழப் பொருள்கள் மற்றும் மசாலா வகைகள் தயாரிப்பு, விற்பனை வாய்ப்புகள், தரக்கட்டுப்பாடு போன்ற தலைப்புகளில் ஒரு மாத காலத்திற்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சியில் கலந்து கொள்ளபவர்களுக்கு மதிய உணவு, தங்கும் இடம், பயிற்சி புத்தகம் ஆகியவை இலவசமாக வழங்கப்படும். விவசாயிகள், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் பட்டதாரிகள் கலந்து கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு முதல்வர், உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி, கொடுவள்ளி, அலமாதி அஞ்சல், செங்குன்றம், சென்னை-52 என்ற முகவரி அல்லது 044-27680214, 9444155312, 9444810657 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

இப்பயிற்சிக்கான விண்ணப்பங்கள் நவம்பர் 15-ம் தேதி வரை பெறப்படும்.

## கேரளத்தில் தடை நீடிப்பு : 6 கோடி முட்டைகள் தேக்கம்

பறவைக் காய்ச்சல் பீதியால் கேரளத்தில் விதிக்கப்பட்ட தடை தொடர்ந்து நீடிப்பதால் நாமக்கல் மண்டல கோழிப்பண்ணைகளில் மொத்தம் சுமார் 6 கோடி முட்டைகள் தேக்கமடைந்துள்ளன. இதனால், முட்டைகளை பண்ணையாளர்கள் மறைமுகமாக ரூ.2-க்கு விற்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பெங்களூரில் ஏற்பட்டுள்ள பறவைக் காய்ச்சல் பீதியை அடுத்து, கேரளத்தில் வெளி மாநில கோழி இறைச்சி, முட்டைகளுக்கு விதிக்கப்பட்ட தடை 7-வது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் நீடித்தது. இதைத் தொடர்ந்து, தமிழக கோழி முட்டை லாரிகள் கேரளத்துக்குள் அனுமதிக்கப்படாமல் மீண்டும் தமிழகத்துக்கே திரும்பி வருகின்றன. இதற்கிடையே, இந்தியக் கோழி முட்டைகள், இறைச்சிகளுக்கு ஓமன் நாட்டிலும் தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நாமக்கல் மண்டல கோழிப் பண்ணைகளில் இதுவரை 6 கோடிக்கும் அதிகமான முட்டைகள் தேங்கியுள்ளன.

இதையடுத்து, நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு சனிக்கிழமை ஒரே நாளில் முட்டைக் கொள்முதல் விலையை 15 காசுகள் குறைத்து ரூ.3ஆக நிர்ணயம் செய்தது. ஆனால், பண்ணைகளில் அதிகப்படியாக தேங்கியுள்ள முட்டைகளை உடனடியாக விற்றாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதால், பண்ணையாளர்கள் முட்டைகளை மறைமுகமாக ரூ.2 முதல் ரூ.2.50 வரை விற்று வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன் காரணமாக, முட்டை உற்பத்தியாளர்களுக்கு தினசரி ரூ.2 கோடி இழப்பு ஏற்பட்டு வருவதாக என்இசிசி நாமக்கல் மண்டலத் தலைவர் செல்வராஜ் தெரிவித்தார்.

கறிக்கோழி விலை வீழ்ச்சி: இதேபோல, கடந்த 6 நாள்களாக கறிக்கோழியும் கேரளத்துக்கு கொண்டு செல்லப்படாததால் அதன் விலையும் கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. நாமக்கல் பகுதியில் கடந்த வாரம் ரூ.120-க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ கறிக்கோழி தற்போது ரூ.60 முதல் ரூ.70-க்கு விற்கப்படுகிறது.

## சம்பா சிறப்பு தொகுப்புத் திட்டம் : திருச்சி மாவட்டத்தில் 4,038 ஏக்கர் நடவு

திருச்சி மாவட்டத்தில் சம்பா சிறப்பு தொகுப்புத் திட்டத்தின் கீழ் அக்.30-ம் தேதி வரையில் 4,038 ஏக்கரில் நடவுப் பணிகள் முடிவுற்றுள்ளன என ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

காவிரி பாசனப் பகுதி விவசாயிகளின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு தமிழக அரசு அறிவித்த, சம்பா சிறப்புத் தொகுப்புத் திட்டம் திருச்சி மாவட்டத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஆழ்குழாய் கிணறு மற்றும் கிணறு உள்ள விவசாயிகளிடம் முன்கூட்டியே நாற்றுகள் விட்டு வாய்க்காலில் தண்ணீர் வந்தவுடன் நடவு செய்ய ஏதுவாக, மாவட்டத்தில் 750 ஏக்கரில் சமுதாய நாற்றங்கால் விடப்பட்டு, வீரியமான நாற்றுகள் உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 9,375 ஏக்கரில் நடவு செய்யத் திட்டமிடப்பட்டு, இதன் மூலம் 5,653 விவசாயிகள் பயன்பெறவுள்ளனர்.

ஒரு ஏக்கரில் சமுதாய நாற்றங்கால் தயாரிக்கும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.19,000 அரசு உதவித் தொகை வழங்கியுள்ளது.

இதுவரை இத்திட்டத்தின் கீழ் 2,076 விவசாயிகள் இலவசமாக நாற்றுகள் பெற்று 4,038 ஏக்கரில் நடவு செய்துள்ளனர். சம்பா சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின் கீழ் நெல் உற்பத்தியை அதிகரிக்கும் முக்கிய காரணிகளான நெல் நுண்ணூட்டக் கலவை, உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா மற்றும் சிங்க் சல்பேட், களர் நிலங்களை சீர் செய்யும் ஜிப்சம் போன்ற இடுபொருள்கள் 75% மானியத்தில் வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இதுவரையில் 1,840 டன் ஜிப்சம், 226.5 டன் நெல் நுண்ணூட்டச்சத்து, 92 டன் சிங்க் சல்பேட் மற்றும் 1,76,800 உயிர் உரப் பொட்டலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் 25% மானிய விலையில் 652 ஏக்கருக்கு ரசாயன உரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் மானிய விலையில் வழங்கப்படும் இடுபொருள்களை தங்கள் பகுதி வேளாண் விரிவாக்க மையங்களில் பெற்று, உரிய பரிந்துரைப்படி வயல்களுக்கு இட்டு சம்பா பருவத்தில் அதிக மகசூல் பெற வேண்டும் என ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## சிறப்பு கால்நடை மருத்துவ முகாம்

பாப்பாகுடி கிராமத்தில் கால்நடைகளுக்கான இனப்பெருக்கம் மற்றும் குடற்புழு நீக்க மருத்துவ சிறப்பு முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

முகாமை அரியலூர் மாவட்ட ஆட்சியர் ப. செந்தில்குமார் தொடக்கி வைத்து; தாது உப்பு மற்றும் பசுந்தீவனம் உற்பத்தி விதைகளை வழங்கினார்.

கால்நடைத் துறை இணை இயக்குநர் உமாமகேஸ்வரி முன்னிலை வகித்தார். மீன்சுருட்டி கால்நடை உதவி மருத்துவர்கள் குமார், கலைச்செல்வன், முருகேசன் ஆகியோர் 50 விலையில்லா கறவை மாடுகள் உள்ளிட்ட 518 மாடுகளுக்கு குடற்புழு நீக்கம், செயற்கை முறை கருவூட்டல், மலடு நீக்கம், சினை ஆய்வு, தடுப்பூசி ஆகிய சிகிச்சை அளித்தனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் : 69.92 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 69.92 அடியாக இருந்தது.

அணைக்கு வினாடிக்கு 9,616 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 1,700 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து கல்லணைக் கால்வாயில் வினாடிக்கு 405 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. காவிரி, வெண்ணாறு, கொள்ளிடத்தில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

## நவ.20-ல் இலவச காளான் வளர்ப்பு பயிற்சி

நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் திருவாரூர் மாவட்டம் மற்றும் சுற்றியுள்ள மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் காளான் வளர்ப்பு ஒரு நாள் இலவச பயிற்சி வரும் 20-ம் தேதி (செவ்வாய்க்கிழமை) நடைபெறவுள்ளது.

காளான் உற்பத்தி செய்திட ஆர்வமுள்ள விவசாயிகளும் அரசு சாரா நிறுவன உறுப்பினர்களும் பண்ணை மகளிர் மற்றும் சுயஉதவிக்குழு உறுப்பினர்களும் பயிற்சியில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் தி. செங்குட்டுவன் கேட்டுக் கொண்டுள்ளார். பயிற்சி பெற விருப்பமுள்ளவர்கள் தங்கள் பெயரினை நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் முன் பதிவு செய்து கொள்ளலாம்.

முன்பதிவு செய்ய தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் 04367-260666,04367-261444.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

06.11.2012 A.M

## உலக அளவில் உற்பத்தி அதிகரிப்பால் மிளகு விலை சரிவு



கொச்சி: சர்வதேச அளவில், மிளகு உற்பத்தி நன்கு இருப்பதை அடுத்து, இதன் விலை, நடப்பு மற்றும் முன்பேர சந்தைகளில் குறைந்து வருகிறது.இதற்கு எடுத்துக்காட்டாக, நவம்பர், டிசம்பர் மற்றும் பிப்ரவரி மாதங்களுக்கான, முன்பேர வர்த்தகத்தில், மிளகின் விலை, குவிண்டாலுக்கு, முறையே, 1,370 ரூபாய், 935 ரூபாய் மற்றும், 1,260 ரூபாய் குறைந்துள்ளது. இதையடுத்து, நவம்பர் மாத விற்பனைக்கான மிளகின் விலை, 42,650 ரூபாய்க்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும், இது, டிசம்பர் மாதத்திற்கு, 42,450 ரூபாய்க்கும், மற்றும் பிப்ரவரி மாதத்திற்கு, 37,600 ரூபாய்க்கும் வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது, வரும் மாதங்களில், மிளகு விலை குறைவதற்கான வாய்ப்பை பிரதிபலிப்பதாக உள்ளது என, இத்துறையைச் சேர்ந்த வர்த்தகர்கள் தெரிவித்தனர்.நடப்பு, 2012ம் ஆண்டில், சர்வதேச அளவிலான மிளகு உற்பத்தி, 3.27 லட்சம் டன்னாக இருக்கும். இந்நிலையில், கையிருப்பு அதிகமாக உள்ளதால், இதன் ஏற்றுமதிக்கான உபரி, 3.36 லட்சம் டன்னாக இருக்கும் என, சர்வதேச மிளகு கூட்டமைப்பு (ஐ.பி.சி.,) மதிப்பிட்டுள்ளது.

மேலும், இது வரும், 2013ம் ஆண்டில், முறையே 3.17 லட்சம் டன் மற்றும் 3.19 லட்சம் டன் என்ற அளவில் இருக்கும் என, தெரிவிக்கப்பட்டுள்ளது நடப்பு, 2012ம் ஆண்டில், இந்தியாவின் மொத்த மிளகு உற்பத்தி, 43 ஆயிரம் டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இதன் கையிருப்பு, 15,816 டன் என்ற அளவிலும், இறக்குமதி, 16,250 டன் என்ற அளவிலும் இருக்கும்

என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின், மிளகு இறக்குமதி, ஜனவரி முதல் செப்டம்பர் வரையிலான, ஒன்பது மாத காலத்தில், கடந்த ஆண்டின், இதே காலத்தை விட, 21.56 சதவீதம் அதிகரித்து, 9,651 டன்னிலிருந்து, 11,732 டன்னாக உயர்ந்துள்ளது.அதேசமயம், இதே காலத்தில், இதன் ஏற்றுமதி, 5.27 சதவீதம் அளவிற்கே உயர்ந்து, 13,291 டன்னிலிருந்து, 13,992 டன்னாக சற்று அதிகரித்துள்ளது.மிளகினை மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக மாற்றி, மறு ஏற்றுமதி மேற்கொள்வதன் காரணமாகவே, இறக்குமதி மிகவும் அதிகரித்து காணப்படுகிறது என, இத்துறையைச் சேர்ந்த வர்த்தகர்கள் தெரிவித்தனர்.அதேசமயம், உள்நாட்டில் இதற்கான தேவை, 42,500 டன்னாகவும், ஏற்றுமதி, 17,500 டன்னாகவும் இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.வரும், 2013ம் ஆண்டில்,

நாட்டின் மிளகு உற்பத்தி, 55 ஆயிரம் டன்னாகவும், கையிருப்பு, 15 ஆயிரம் டன்னாகவும் இருக்கும் என, மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. அதேசமயம், உள்நாட்டில் இதன் பயன்பாடு, 43 ஆயிரம் டன்னாகவும், ஏற்றுமதி, 25 ஆயிரம் டன்னாகவும் இருக்கும் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.உலகளவில், வியட்நாம் நாடு, அதன் ஏற்றுமதி தேவையை பூர்த்தி செய்து கொள்ளும் வகையில், இந்தோனேஷியாவிலிருந்து, அதிகளவில் மிளகு இறக்குமதி மேற்கொள்ள படும் என, எதிர்பார்க்கப்படுகிறது.இந்தோனேஷியாநடப்பு, 2012ம் ஆண்டில்,

இந்தோனேஷியாவின் மிளகு உற்பத்தி, 45 ஆயிரம் டன்னிலிருந்து, 63 ஆயிரம் டன்னாக உயரும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், இதன் ஏற்றுமதியும், 36,487 டன்னிலிருந்து, 62,614 டன்னாக அதிகரிக்கும் என, தெரிவிக்கப்பட்டுள்ளது.அதேசமயம், வரும் 2013ம் ஆண்டில், இந்நாட்டின் மிளகு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி முறையே, 47 ஆயிரம் டன் மற்றும், 43,614 டன் என்ற குறைந்த அளவில்தான் இருக்கும் என, ஐ.பி.சி., மேலும் தெரிவித்துள்ளது.

## சோயா புண்ணாக்கு ஏற்றுமதி 51,050 டன்னாக குறைந்தது



புதுடில்லி: நாட்டின் சோயா புண்ணாக்கு ஏற்றுமதி, சென்ற அக்டோபர் மாதத்தில், 78 சதவீதம் வீழ்ச்சி கண்டு, 51,050 டன்னாக சரிவடைந்துள்ளது. இது, கடந்த 2011ம் ஆண்டின் இதே

மாதத்தில், 2,34,594 டன்னாக மிகவும் அதிகரித்து காணப்பட்டது.சர்வதேச அளவில், ஏற்றுமதிக்கான ஆர்டர்கள் குறைந்தது மற்றும் உள்நாட்டிற்கான தேவை, 3 லட்சம் டன்னாக அதிகரித்தது போன்றவற்றால், மதிப்பீட்டு மாதத்தில், சோயா புண்ணாக்கு ஏற்றுமதி மிகவும் குறைந்து போயுள்ளது என, இந்திய சோயா பதப்படுத்துவோர் கூட்டமைப்பின் செய்தி தொடர்பாளர் ராஜேஷ் அகர்வால் தெரிவித்தார்.நடப்பு நிதியாண்டின், முதல் ஏழு (ஏப்ரல்-அக்டோபர்) மாதங்களில், சோயா புண்ணாக்கு ஏற்றுமதி, 35 சதவீதம் சரிவடைந்து, 13.63 லட்சம் டன்னிலிருந்து, 8.88 லட்சம் டன்னாக குறைந்துள்ளது.சோயா உற்பத்தி குறைந்து போனதால், கடந்த 2010-11ம் எண்ணெய் பருவத்தில் (அக்.,-செப்.,), 41.27 லட்சம் டன்னாக இருந்த சோயா புண்ணாக்கு ஏற்றுமதி,சென்ற 2011-12ம் பருவத்தில், 36.23 லட்சம் டன்னாக சரிவடைந்தது. விலை மேலும் உயரும் என்ற எதிர்பார்ப்பால்,விவசாயிகள் சோயாவை அதிகளவில் கையிருப்பில் வைத்துள்ளனர். இதனால், மொத்தவிற்பனை சந்தையில், இதன் வரத்து, மிகவும் குறைந்து போயுள்ளது என, ராஜேஷ் அகர்வால் மேலும் கூறினார்.

## நாட்டின் பருத்தி ஏற்றுமதி 70 லட்சம் பொதிகளாக குறையும்



மும்பை: சர்வதேச அளவில், இந்திய பருத்தியின் விலை அதிகமாக உள்ளது. இதனால், நடப்பாண்டில், நாட்டின் பருத்தி ஏற்றுமதி, 70 லட்சம் பொதிகளாக குறையும் என, தேசிய ஜவுளி ஆணையர் தெரிவித்துள்ளார்.

உலக பருத்தி உற்பத்தியில், இந்தியாவின், பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது. கடந்த 2006-07ம் நிதியாண்டில், இந்தியாவின் பருத்தி ஏற்றுமதி, 58 லட்சம் பொதிகளாக இருந்தது. இது, சென்ற 2011-12ம் நிதியாண்டில், 1.28 கோடி பொதிகளாக உயர்ந்து காணப்பட்டது. சர்வதேச அளவில், மற்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது, ஒரு கேண்டி (356 கிலோ) இந்திய பருத்தியின் விலை, 2,000-3,000 ரூபாய் அதிகமாக உள்ளது. தற்போது, குஜராத் சந்தையில், ஒரு கேண்டி, "சங்கர் 6' வகை பருத்தி விலை, 32,500 ரூபாயாக உள்ளது.

இந்திய பருத்தியின் விலை அதிகமாக இருப்பதால், இதனை இறக்குமதி செய்வதை பல நாடுகள்

தவிர்த்து வருகின்றன. தற்போது, ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட ஆர்டர்கள் மட்டுமே குறைந்தளவில், ஏற்றுமதி

செய்யப்பட்டு வருகின்றன. விலை உயர்வால், இந்திய வர்த்தகர்களுக்கு, புதிய ஆர்டர்கள் எதுவும் கிடைக்காத சூழல் நிலவுகிறது.இதுகுறித்து சர்வதேச பருத்தி ஆலோசனை குழுவின் உயரதிகாரி ஒருவர் கூறுகையில்,"சென்ற நிதியாண்டில், சர்வதேச பருத்தி வர்த்தகம் சிறப்பாக இருந்தது.நடப்பாண்டில், சீனாவில் பருத்திக்கான தேவைப்பாடு குறைந்துள்ளதால், உலக அளவில், பருத்தி வர்த்தகம், முந்தைய நிதியாண்டை விட, 21 சதவீதம் குறைந்து, 77 லட்சம் டன்னாக குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது' என்றார்.

## வாழை ஆராய்ச்சி மையம் தேவை

தேனி:தேனி மாவட்ட உரம், பூச்சி மருந்து, விதைகள் வியாபாரிகள் சங்கம் சார்பில், முதல்வருக்கு அனுப் பியுள்ள மனு: தேனி மாவட்டத்தில் காய்கறிகள், பழங்களை பாதுகாத்து விற்பனை செய்ய குளிரூட்டப்பட்ட கட்டமைப்பு வசதிகள் அமைக்க வேண்டும். வைகை அணையில் உள்ள வண்டல் படிவுகளை அகற்றி, அதிக நீர் ÷தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். வாழை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும். உரக்கம்பெனிகள் டீலர்களுக்கு உரங்களை நேரடியாக சப்ளை செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு கூறியுள்ளனர்.

## எண்ணெய் பனை சாகுபடி செய்யஅழைப்பு

தேனி:தேனி மாவட்ட விவசாயிகள் எண்ணெய் பனை சாகுபடி செய்ய முன்வர வேண்டும், என விவசாய இணை இயக்குனர் சுந்தரம் அழைப்பு விடுத்துள்ளார். மாவட்டத்தில் எண்ணெய் பனை சாகுபடி செய்த விவசாயிகளிடம் இருந்து, பனை குலைகளை ருச்சிசோயா நிறுவனம் கொள்முதல் செய்து அதற்கான பணத்தை டன்னுக்கு 7,206 ரூபாய் வீதம் விவசாயிகளுக்கு வழங்கியது. கலெக்டர் பழனிசாமி இந்நிதியை வழங்கினார்.விவசாய இணை இயக்குனர் சுந்தரம், கலெக்டரின் நேர்முக உதவியாளர் முத்தையா, ருச்சி சோயா நிறுவன மேலாளர் முத்துச்செல்வன் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.விவசாய இணை இயக்குனர் சுந்தரம் கூறியதாவது: மாவட்டத்தில் எண்ணெய் பனை சாகுபடிக்கு உகந்த சூழ்நிலை நிலவுகிறது. ஒரு எக்டேர் பரப்பில் எண்ணெய் பனை சாகுபடி செய்ய, ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. தற்போது மாவட்டத்தில் 350 எக்டேரில் எண்ணெய் பனை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. எண்ணெய் பனை சாகுபடியில் நல்ல லாபம் இருப்பதால், விவசாயிகள் அதிகளவு சாகுபடி செய்ய முன்வர வேண்டும்,என்றார்.

## மானியத் தில் விதை

சிங்கம்புணரி: சிங்கம்புணரி ஒன்றிய விவசாயிகளுக்கு மானிய விலையில் நிலக்கடலை விதை வழங்கப்படுகிறது.தற்போது பெய்துள்ள மழைநீரைப் பயன்படுத்தி,விவசாயிகள் கடலை பயிர்செய்ய உழவு செய்துள்ளனர்.சிங்கம்புணரி வேளாண்மை வளர்ச்சி மையத்தில் சிறு,குறு,விவசாயிகளுக்கு நிலக்கடலை விதை கிலோ ஒன்றுக்கு 12 ரூபாய் மானியத்தில் வழங்கப்படுகிறது.மேலும் விசைத்தெளிப்பான், கைத்தெளிப்பான்கள் மானியத்தில் வழங்கப்படும் என வேளாண்மை உதவி இயக்குனர் (பொறுப்பு)கண்ணன் தெரிவித்துள்ளார்.

## கால்நடைகள் பராமரிப்பு அவசியம்

திருப்புத்தூர்:""மழைக்காலத்தில், கால்நடைகளை கூடுதலாக பராமரிக்கவேண்டும்," என, திருப்புத்தூர் கால்நடை டாக்டர் விஸ்வநாதன் தெரிவித்தார். அவர் கூறியதாவது: ""பெரிச்சிகோவிலில், நோயால் பசுக்கள் இறந்தன. ஆடுகளுக்கும் டி.பி.ஆர்., நோய் தாக்கின. கால்நடை தொழுவத்தினை சுத்தமாக வைக்கவும். பொருத்தமான தீவனத்தை, ஈரம் படாமல் பாதுகாத்து, வழங்கவேண்டும். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை குடற்புழு மருந்து தந்தால், கால்நடைகள் இறப்பை தவிர்க்கலாம்," என்றார்.

## கால்நடை மருத்துவ முகாம்அமைச்சர் துவக்கினார்

விருதுநகர்:சிவகாசி, ஈஞ்சார் கிராமத்தில் நடந்த கறவை பசு இனப்பெருக்க சோதனை, ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமை, அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜி துவக்கி வைத்து பேசியதாவது:கால்நடைகள் பராமரிக்கப்பட்டு, மருத்துவர்கள் மூலம் தொடர் பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. பால் உற்பத்தி, வெள்ளாடு எடையை அதிகரிக்க, மருத்துவ முகாம் நடத்த, முதல்வர் உத்தரவிட்டுள்ளார்," என்றார். ஒன்றிய தலைவர் ராதாகிருஷ்ணன், துணைத்தலைவர் சுப்பிரமணியன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் கருப்பசாமி, முருகையாபாண்டியன் ஊராட்சித்தலைவர் கி.போஸ், துணைத்தலைவர் வேலுச் சாமி கலந்து கொண்டனர்

## கொப்பரை தேங்காய் விலை உயர்வு கி.கிரி மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி

கிருஷ்ணகிரி: தீபாவளி பண்டிகையையொட்டி, கொப்பரை தேங்காய் விலை உயர்ந்துள்ளதால், கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 16 லட்சம் தென்னை மரங்கள் உள்ளன. குறிப்பாக தென்பெண்ணை ஆற்று படுகை பகுதியான காவேரிப்பட்டணம், பெண்ணேஸ்வரமடம், அகரம், நெடுங்கல், பாரூர், அரசம்பட்டி ஆகிய பகுதிகளில் அதிக அளவில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் தேங்காய் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்நிலையில், ஈரியோஃபைட் நோய் மற்றும் கருந்தலை புழுக்களின் தாக்குதால் தேங்காயின்

பருமன் சிறத்து போனதால், வெளி மார்க்கெட்டில் கிருஷ்ணகிரி மாவட்ட தேங்காய்க்கு வரவேற்ப்பு குறைந்து விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

இதனால் தென்னை விவசாயிகள் தேங்காயை கொப்பரைகளாக மாற்றி எண்ணை மில்லுக்கு விற்பனை செய்ய அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக அரசம்பட்டி பகுதியில் கொப்பரை தேங்காய் உற்பத்தியில் விவசாயிகள் முழு அளவில் ஈடுபட்டுள்ளனர்.

தினசரி இப்பகுதியில் இருந்து, 25 டன் கொப்பரை உற்பத்தி செய்யப்படுகிறது. கொப்பரையை காங்கேயம், வெள்ளக்கோவில், அவல் பூந்துறை ஆகிய இடங்களில் இருந்து வரும் வியாபாரிகள் எண்ணைணெய் உற்பத்திக்காக வாங்கி செல்கின்றனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன் அரசம்பட்டி பகுதியில் உற்பத்தி செய்யப்படும் ஒரு கிலோ கொப்பரை 32 ரூபாய்க்கு வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். தற்போது, தீபாவளி சீசனை முன்னிட்டு எண்ணைய் உற்பத்தி அதிகரித்துள்ளதால், கொப்பரை தேங்காய் விலையும் கூடியுள்ளது. தற்போது, ஒரு கிலோ கொப்பரை, 39 ரூபாயில் இருந்து 40 ரூபாய் வரை வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர். இதனால், கொப்பரை உற்பத்தியாளர்கள் மற்றும் தென்னை விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## சின்ன வெங்காயம் வரத்து சரிவு எதிரொலி : கிலோவுக்கு ரூ.20 விலை அதிகரிப்பு

ஈரோடு: ஏற்றுமதி அதிகரிப்பாலும், வாட்டி வதைத்த பருவமழையால் தமிழகத்தில் சின்ன வெங்காயம் வரத்து குறைந்து, சின்ன வெங்காயம் கிலோவுக்கு, 20 ரூபாய் உயர்ந்துள்ளது.

ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழகத்தில் சின்ன வெங்காயம் அதிகளவு உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழகத்தில், 2010-11ல் வெங்காய சாகுப்படி பரப்பு, 33 ஆயிரத்து, 800 எக்டேர் இருந்தது. இதில், சின்ன வெங்காயத்தின் பரப்பளவு, 70 சதவீதம் பங்களிப்பு இருந்தது. கடந்தாண்டைவிட, நடப்பாண்டு வெங்காயம் உற்பத்தி, அதிகரித்தது. மண்டிகளில் வரத்து அதிகரிப்பால், ஜனவரி முதல், ஏப்ரல் வரை, சின்ன வெங்காயத்தின் பண்ணை விலை கிலோவுக்கு, ஏழு முதல், 12 ரூபாயாக இருந்தது.

மத்திய அரசு வெங்காய விலை குறைப்பை தடுப்பதற்காகவும், ஏற்றுமதியை அதிகரிக்கும் பொருட்டு குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை, ஜூன் மாதம் நீக்கியது. இதன் மூலம் ஏற்றுமதி வாய்ப்பு அதிகரிப்பால், சின்ன வெங்காயத்தின் விலையும் உயர்ந்தது.

தமிழகத்தில் சின்ன வெங்காயம் வரத்து குறைந்து விட்டது. மாநிலம் முழுவதும் பெய்ந்த பருவமழையால், விளைச்சள் கடுமையாக பாதித்துள்ளது. இருப்பில் வைத்துள்ள சின்ன வெங்காயம், மழையால் குடோன்களிலேயே பாதி அழுகி விடுகிறது. தற்போது வெங்காயம் தேவை அதிகம் உள்ள நிலையில், தட்டுப்பாட்டால், விலை கடுமையாக உயர்ந்துள்ளதாக, வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

ஈரோடு, வெங்காய மொத்த வியாபாரி ஷேக்மன்சூர் கூறியதாவது:

கர்நாடகா மாநிலம், பெல்லாரி, ஆந்திர மற்றும் தமிழகத்தில் பல்லடம், தாளவாடி, ராசிபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சின்ன வெங்காயம் அதிக பரப்பளவில் பயிரிடப்படுகிறது. ஜூலை மாதத்தில் இருந்து இலங்கைக்கு மட்டும் ஏற்பதி வாய்ப்பு அதிகரித்து, சீரான விலை ஏற்றம் இருந்தது.

கடந்த சில நாட்களாக உள்நாட்டில் பெய்ந்து வரும் மழையால், வெங்காயம் விளைச்சல் பாதித்துள்ளது. குடோன்களில் இருப்பு வைத்த சின்ன வெங்காயம், மழையால் பாதி அழுகிவிடுகிறது. இதனால், தமிழகத்தில் வரத்து குறைந்து, விலை தாறுமாறாக உயர்ந்துள்ளது. கடந்த வாரம், சின்ன வெங்காயம் கிலோ, 20 ரூபாய்க்கு விற்றது, 20 ரூபாய் அதிகரித்து, 35 முதல், 40 ரூபாய் வரை சந்தையில் விற்கப்படுகிறது. பெரிய வெங்காயம் கிலோ, 12 ரூபாய்க்கு விற்றது, எட்டு ரூபாய் உயர்ந்து, 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தீபாவளி பண்டிகை நெருங்கி வரும் நிலையில், மேலும் விலை அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

## உழவர் பாதுகாப்பு திட்டம் : உதவித்தொகை பெற அழைப்பு

ஊட்டி:முதல்வரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம்.மாவட்ட கலெக்டர் அர்ச்சனாபட்நாயக் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: முதல்வரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், பதிவு பெற்ற உறுப்பினர்களின் குழந்தைகளின் கல்விக்காக உதவித்தொகை வழங்கப்படுகிறது.

தொழிற்பயிற்சி நிறுவனம்(ஐ.டி.ஐ) மற்றும் பல்தொழில்நுட்ப பயிற்சி (பாலிடெக்னிக்), கவின்கலை, ஆசிரியர் பயிற்சி மற்றும் செவிலியர் பட்டயப்படிப்பு, இளங்கலை பட்டபடிப்பு, முதுகலை பட்டபடிப்பு, சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை அறிவியல் வேளாண்மை அல்லது அது தொடர்பான பாடங்களில் தொழிற்கல்வி, முதுநிலை தொழிற்கல்வி ஆகியவற்றில் பயிலும் மாணவர்கள் விடுதியில் தங்காதோர், விடுதியில் தங்குவோர் என்ற அடிப்படையில் உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பதிவுபெற்ற உறுப்பினர்களின் குழந்தைகள் வேறு எந்த துறையிலாவது

கல்விக்காக நிதியுதவி பெற்றாலும், இத்திட்டத்தின் கீழ் கல்வி உதவியானது கூடுதலாக அமையும். முதல்வரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற உழவர் அடையாள அட்டை நகல், சம்பந்தப்பட்ட கல்லூரியிலிருந்து வழங்கப்படும் சான்று (போனபைட் சர்டிபிகேட்) ஆகியவற்றுடன் தங்கள் கிராமத்தை சேர்ந்த கிராம நிர்வாக அலுவலரிடமோ அல்லது சமூக பாதுகாப்பு திட்ட தனி தாசில்தாரிடமோ விண்ணப்பித்து பயனடையலாம். இவ்வாறு அர்ச்சனா பட்நாயக் கூறியுள்ளார்.

## உழவர் பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரம் துவக்கம்

க.பரமத்தி: தென்னிலையில் தமிழக அரசின் உழவர் பாதுகாப்பு திட்ட விழிப்புணர்வு பிரச்சாரம் துவக்கப்பட்டது. தென்னிலைப் பகுதியில் தமிழக அரசின் உழவர் பாதுகாப்பு திட்ட விழிப்புணர்வு

பிரச்சாரத்தை, மாவட்ட ஆதிதிராவிடர் துறை நல அலுவலர் மாரிமுத்து துவக்கி வைத்தார். பிரசாரத்தின் போது உழவர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு சலுகைககளையும் அரசின் நலத்திட்ட உதவி களையும் மற்றும் கடன் உதவிகளையும் விளக்கி கூறினர்.

தாசில்தார் ரவிக்குமார், தென்னிலை ஆர்.ஐ., பன்னீர்செல்வம், வி.ஏ.ஓ.,க்கள் லோகநாதன், துரைசாமி, செந்தில்குமார், நல்லுசாமி, ராதா, கார்த்திகேயன் பங்கேற்றனர்.

## உழவர் பாதுகாப்பு திட்ட பயன்களை பெற விண்ணப்பங்கள் வரவேற்பு

காஞ்சிபுரம்:காஞ்சிபுரம் மாவட்டத்தில், முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், பயன்பெற விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதற்காக நடத்தப்படும் சிறப்பு முகாம்களில், இன்று முதல் 9ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்.முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உறுப்பினர்களைப் பதிவு செய்ய, கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம், ஒவ்வொரு கிராமத்திலும், குடும்ப அட்டை அடிப்படையில், கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. தகுதியுள்ள நபர்கள், குடும்ப அட்டை எண்ணுடன் பதிவு செய்யப்பட்டனர்.

உறுப்பினர் சேர்க்கைஇரண்டரை ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலம் அல்லது ஐந்து ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலம், சொந்தமாக வைத்திருந்து, அந்த நிலத்தில் நேரடியாக பயிர் செய்யும், 18 வயது முதல், 65 வயது வரை உள்ள, அனைத்து குறு, சிறு விவசாயிகள், நிலத்தை குத்தகை அடிப்படையில் எடுத்து விவசாயம் செய்வோர், விவசாய கூலித் தொழிலாளர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டனர்.

வழங்கப்படும் உதவிகள்

விபத்தில், மரணம், கை, கால்கள் இழப்பு, கண்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு லட்ச ரூபாய். விபத்தில், ஒரு கை, ஒரு கால் இழந்தவர்களுக்கும், பக்கவாதம் ஏற்பட்டவர்களுக்கும், 50 ஆயிரம் ரூபாய்.

பலத்த காயமடைந்து கை அல்லது கால் இழந்தவர்களுக்கு, 20 ஆயிரம் ரூபாய், இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கிற்கு, 12, 500 ரூபாய்.திருமண உதவித் தொகையாக ஆண்களுக்கு, 8,000 ரூபாய், பெண்களுக்கு, 10 ஆயிரம் ரூபாய்.தொழிற் பயிற்சி, கலை ஆசிரியர் பயிற்சி, செவிலியர் பட்டய பயிற்சி படிக்கும் மாணவர்கள் விடுதியில் தங்கியிருந்தால், மாணவர்களுக்கு ஆண்டுக்கு, 1,450 ரூபாய், மாணவிக்கு, 1,950 ரூபாய், விடுதியில் தங்காத மாணவருக்கு, 1,250 ரூபாய், மாணவிக்கு, 1,750 ரூபாய்.சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை அறிவியல், வேளாண்மை உட்பட, தொழிற்கல்வி படிக்கும் மாணவருக்கு, ஆண்டுக்கு, 2,250 ரூபாய், மாணவிக்கு, 6,750 ரூபாய்.

விண்ணப்பிக்கலாம்...

"முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், நலத் திட்டங்களைப் பெற தகுதியான உறுப்பினர்கள், அதற்குரிய விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து, சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் அல்லது சமூக பாதுகாப்பு திட்ட தனி வட்டாட்சியரிடம் அளிக்கலாம். உறுப்பினராக சேர விரும்புவோர் உடனடியாக சேரலாம்,' என, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் சித்ரசேனன் தெரிவித்துள்ளார்.கொடிய நோய்க்கும் நிவாரணம் உழவர் பாதுகாப்பு திட்டத்தில் உள்ள உறுப்பினர்களில், 60 வயது நிரம்பிய ஆதரவற்றவர்கள், கொடிய நோய்களான புற்றுநோய், எய்ட்ஸ், காசேநாய், போன்றவற்றால் பாதிக்கப்பட்டு, சிகிச்சைப் பெற்று வந்தால், அவர்களுக்கு சிகிச்சைக் காலத்திற்கு தற்காலிக நிவாரணமாக மாதம், 1,000 ரூபாய் வழங்கப்படும். இதைப் பெற விரும்புவோர் விண்ணப்பிக்கலாம்..9ம் தேதி வரை சிறப்பு முகாம்

உழவர் பாதுகாப்பு திட்டத்தில் உறுப்பினராக சேர்ந்துள்ளவர்கள், நலத் திட்ட உதவிகளை பெற விண்ணப்பிப்பதற்காக, இன்று முதல், 9ம் தேதி வரை, காஞ்சிபுரம் மாவட்டத்தில் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. அந்தந்த பகுதி கிராம நிர்வாக அலுவலர்களால் நடத்தப்படும் முகாமில், நலத் திட்ட உதவி பெற தகுதியானவர்கள் விண்ணப்பங்களை அளிக்கலாம்.

**தரமான விதைகளை பயன்படுத்தினால் விவசாயிக ள் அதிகமகசூல் பெறலாம்**

விக்கிரவாண்டி:விக்கிரவாண்டி வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு நெல் விதை கிராம திட்ட பயிற்சி நடந்தது.

விக்கிரவாண்டி திருமலைச்சாமி திருமண மண்டபத்தில் நடந்த பயிற்சிக்கு ஆத்மா குழு தலைவர் குமாரசாமி தலைமை தாங்கினார். உதவி இயக்குனர் அரிகிருஷ்ணன் வரவேற்றார்.

மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சேகர் கலந்து கொண்டு பயிற்சியை துவக்கி வைத்து பேசியதாவது:மாவட்டத்தில் ஒரு லட்சத்து 90 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. விக்கிரவாண்டி வட்டாரத்தில் 8,500 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.இதில் அரசு டெப்போவிலிருந்து 1,800 ஹெக்டேருக்கு சான்று பெற்ற விதைகளை விவசாயிகள் வாங்கி சென்றுள்ளனர். தனியார் விதை மையங்களில் நெல் விதைகளை வாங்கி, நெல் பயிர் சாகுபடி செய்துள்ளனர். அரசின் நோக்கமே அனைத்து விவசாயிகளும் தரமான சான்று பெற்ற விதைகளை வாங்கி பயிர் செய்ய வேண்டும் என்பதுதான். தரமான விதைகளை பயிர் செய்யும் போது மகசூல் அதிகரித்து லாபம் அதிகம் பெற முடியும். தரமான சான்று பெற்ற விதைகளை தயார் செய்ய விதை கிராம திட்டத்தை அரசு தேர்வு செய்து விதை நேர்த்தி செய்ய தேவையான பயிற்சி விதைச்சான்று அலுவலர்களால் அளிக்கப்படுகிறது.விவசாயிகள் பயிற்சி பயன்படுத்தி தரமான விதைகளை தயாரித்து அதிகமகசூல் பெற்று லாபம் பெற வேண்டுகிறேன்.

இவ்வாறு இணை இயக்குனர் சேகர் பேசினார். விதை சான்று இணை இயக்குனர் வேலாயுதம்,

விதை அலுவலர் சரவணன், உதவி வேளாண்மை அலுவலர் சுப்ரமணியன், உதவி விதை அலுவலர் ஹரி ராமச்சந்திரன் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் பயிற்சி அளித்தனர்.

## மேட்டூர் அணை நீர்திறப்பு 3,500 கனஅடியாகஅதிகரிப்பு

மேட்டூர்: மேட்டூர் அணையிலிருந்து, பாசனத்துக்கான நீர்திறப்பு, நேற்று காலை, 10 மணி முதல் வினாடிக்கு, 3,500 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. நீலம் புயலால் நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் அடைந்து, நீர்வரத்து அதிகரித்ததால், கடந்த 1ம் தேதி, 66.600 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று, 70.320 அடியாகவும், 29.850 டி.எம்.சி.,யாக இருந்த நீர்இருப்பு நேற்று, 32.976 டி.எம்.சி.,யாக அதிகரித்தது. டெல்டா மாவட்டங்களிலும் பருவமழை தீவிரம் குறைந்து, பாசனத்துக்கான நீர்தேவை அதிகரித்ததால், வினாடிக்கு, 1,700 கனஅடியாக இருந்த, மேட்டூர் அணை நீர்திறப்பு நேற்று காலை, 10 மணி முதல், வினாடிக்கு, 3,500 கனஅடியாக அதிகரித்தது. நேற்று அணைக்கு வினாடிக்கு, 5,639 கனஅடி நீர்வந்தது. ஐந்து நாளில் அணை நீர்மட்டம், 4 அடியும், நீர் இருப்பு, 3 டி.எம்.சி.,யும் அதிகரித்துள்ளது.

## உணவு பதப்படுத்தும் தொழிலுக்கு மானியத்துடன் கூடிய நிதியுதவி

தர்மபுரி: உணவு பதப்படுத்தும் தொழிலுக்கு மத்திய, மாநில அரசுககள் மானியம் வழங்கி வருகிறது.கலெக்டர் லில்லி வெளியிட்ட அறிக்கை:உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகம் மற்றும் தமிழக அரசும் இணைந்து, 12வது ஐந்தாண்டு திட்டத்தில் புதிய மத்திய அரசு திட்டமான தேசிய உணவு பதப்படுத்தும் இயக்க திட்டத்தை செய்படுத்தியுள்ளது. இத்திட்டத்தில் முக்கிய குறிக்கோள் மத்திய உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைச்சகத்தின் திட்டங்களை மாநில அரசுகள் மூலம் செயல்படுத்துவதேயாகும்.

தேசிய உணவு பதப்படுத்தும் இயக்கத்தின் மூலம் மத்திய, மாநில மற்றும் மாவட்ட அளவில் இயக்கங்கள் அமைக்கப்படவுள்ளது. இத்திட்டத்தில் மானிய தொகை 75:25 என்ற விகிதத்தில் மத்திய, மாநில அரசுகள் வழங்குகிறது. தொழில் நுட்ப மேம்பாடு, உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் ஏற்படுத்தல், நவீனப்படுத்தலுக்கு கருவிகள் மற்றும் தளவாடங்கள் மற்றும் தொழில் நுட்ப கட்டுமானத்துக்கு, 25 சதவீதம் அதிகபட்சம் 50 லட்ச ரூபாய் நிதியுதவி வழங்கப்படும். குளிர்பதன வசதி, குளிருட்டப்பட்ட வசதிகள் தோட்டக்கலை பயிர்கள் இல்லாத பொருட்களுக்கு, கருவிகள் மற்றும் தளவாடங்கள் மற்றும் தொழில் நுட்ப காட்டுமானத்துக்கு, 50 சதவீதம் அதிகபட்சமாக, 10 கோடி ரூபாயும், மனித வள மேம்பாட்டு திட்டத்தில், உணவு பதப்படுத்தும், தொழில் நுட்பம் தொடர்பான பட்டம், பட்டய படிப்புக்கான உள்கட்டமைப்பு வசதிகள், புத்தகங்கள், பரிசோதனை கூட கருவிகள், போன்ற உட்கட்டமைப்புக்கு அதிகபட்சம், 75 லட்ச ரூபாய் வதைர நிதியுதவி வழங்கப்படுகிறது.

தொழில் முனைவோர் பயிற்சிகளுக்கு, 2 லட்ச ரூபாயும், உணவு பதப்படுத்தும் பயிற்சி மயைங்களுக்கு ஒரு பொருள் பயிற்சி அதிகபட்சமாக, 4 லட்ச ரூபாய் நிலையான முதலீட்டிற்கும்

மற்றும் 2 லட்ச ரூபாய் சுழற்சி முதலீட்டுக்கும் வழங்கப்படுகிறது.

பல பொருள் பயிற்சிக்கு, அதிகபட்சம், 11 லட்ச ரூபாய், நிலையான முதலீட்டுக்கு, 4 லட்ச ரூபாய் சுழற்சி முதலீட்டிற்கும் வழங்கப்படும். விளம்பரம் மூலம் மேம்பாட்டு திட்டங்களில், கருத்தரங்கு மற்றும் பணிமனை கூட்டம், திட்ட மதிப்பில், 50 சதவீதம் அதிகபட்சம் 3 லட்சம், படிப்பு மற்றும் கணக்கெடுப்பு திட்ட மதிப்பில், 50 சதவீதம், அதிகபட்சம், 3 லட்ச ரூபாய், கருத்துக்காட்சி மற்றும் கண்காட்சி, திட்டத்துக்கு ஏற்றவாறு நிதி உதவி வழங்கப்படும்.

மானியம் கோரும் அனைத்து விண்ணப்பங்களை மாவட்ட உணவு பதப்படுத்தும் இயக்கம், வேளாண் துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) மூலமாக மாநில இயக்குனருக்கு அனுப்பிட வேண்டும். இது குறித்து மேலும் விரிவான தகவல்கள் பெற www.mofpi.nic.in என்ற இணையதள முகவரியிலும், வேளாண் துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) அலுவலத்திலும் சென்று அறிந்து கொள்ளலாம்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

05.11.2012 P.M

06.11.2012 A.M

## வெல்லம் , எண்ணெய் விலை உயர்வு



சென்னை : தீபாவளி நெருங்குவதால் எண்ணெய், வெல்லம் விலை கிலோவுக்கு 10 ரூபாய் வரை உயர்ந்துள்ளது. இதனால், வீடுகளில் பலகாரம் செய்வோர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். தீபாவளி பண்டிகை வரும் 13ம் தேதி கொண்டாடப்படுகிறது. இன்னும் சில நாட்களே எஞ்சியுள்ளதால் மக்கள் தயாராகி வருகிறார்கள். ஆனால், தீபாவளி பண்டிகை நெருங்கும் நேரத்தில் எண்ணெய், அச்சு வெல்லம், பருப்பு உள்ளிட்டவைகள் விலை உயர தொடங்கியுள்ளன.

கடந்த வாரம் சேலம் வெல்லம்(1 கிலோ) யி40க்கு விற்றது தற்போது யி10 அதிகரித்து யி50க்கு விற்கப்படுகிறது. அதேபோல, வேலூர் வெல்லம் யி45லிருந்து யி50க்கும், அச்சு வெல்லம் 50 லிருந்து யி60 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. பாசிப்பருப்பு (1 கிலோ) 75 லிருந்து யி80க்கும், சர்க்கரை 35 லிருந்து 37க்கும், சன்பிளவர் ஆயில் (1 கிலோ) யி79 லிருந்து யி82க்கும், பாமாயில் 56லிருந்து 60க்கும், கடலை எண்ணெய் ரீபைன்ட் (1 பாக்கெட்) 117 லிருந்து 122க்கும், வனஸ்பதி 75 லிருந்து 80க்கும், அக்மார்க் நல்லெண்ணெய் யி160லிருந்து 170க்கும், சாதா நல்லெண்ணெய் 80 லிருந்து யி85க்கும் விலை உயர்ந்துள்ளது.

ஆனால், தேங்காய் எண்ணெய் விலை உயரவில்லை. முதல் ரகம் யி95, 2ம் ரகம் 80க்கும்

விற்கப்படுகிறது. உயர் ரகம் மற்றும் சாதாரண சுவீட்ஸ் ஸ்டால்களில் காரம், இனிப்பு விலை ஏற்கனவே கடுமையாக உயர்ந்துள்ளது. இந்த நேரத்தில் எண்ணெய், பருப்பு விலை உயர்ந்துள்ளது வீடுகளில் தீபாவளி பலகாரங்கள் செய்வோரை மேலும் கவலை அடைய செய்துள்ளது.

இதேபோல, இட்லி அரிசி (75 கிலோ மூட்டை) 2200 லிருந்து 2300க்கும், அதிசய பொன்னி 2100லிருந்து 2200க்கும், குச்சி ரக அரிசி 1800 லிருந்து 1900 ஆகவும், பாபட்லா அரிசி 2300லிருந்து 2900 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. அரிசி விலை அறுவடை தொடங்கும் வரை, அதாவது 1 மாதத்துக்கு விலை குறைய வாய்ப்பில்லை என்று தமிழ்நாடு அனைத்து மளிகை வியாபாரிகள் சங்க தலைவர் எஸ்.பி.சொரூபன் தெரிவித்துள்ளார்.

## தமிழக முட்டை , கோழிகள் நிபந்தனையுடன் அனுமதி




நாமக்கல், : பெங்களூர் அருகே ஹெசர்ஹட்டாவில் மத்திய அரசின் வான் கோழிப்பண்ணையில் கடந்த 26ம் தேதி பறவைக்காய்ச்சலால் கோழிகள் இறந்தன. இதையடுத்து, கேரள அரசு கடந்த 30ம் தேதி முதல் வெளிமாநிலத்தில் இருந்து கொண்டுவரப்படும் பிராய்லர் கோழி, முட்டைக்கு தடை விதித்தது. இதனால், நாமக்கல்லில் இருந்து கேரளாவுக்கு கடந்த 7 நாட்களாக முட்டை கொண்டு செல்லப்படவில்லை. சுமார் 7 கோடி முட்டைகள் தேங்கியது. இதற்கிடையே ஓமன் நாடும் இந்திய முட்டை இறக்குமதிக்கு தடை விதித்தது.

கேரள அரசின் தடையை நீக்க தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர் சங்கம் சார்பில் மாவட்ட ஆட்சியர் ஜெகநாதன் மூலம் முயற்சி மேற்கொண்டனர். நாமக்கல் மண்டலத்தில் பறவை காய்ச்சல் இல்லை என்பதற்கான சான்றிதழ்களை பெற்று ஆட்சியர், தமிழக அரசு மூலம் கேரள அரசுக்கு

அனுப்பி வைத்தார். இந்நிலையில், நேற்று கேரள மாநில கால்நடைத் துறை அமைச்சர் மோகனன், கால்நடைத் துறை செயலாளர், இயக்குனர் அடங்கிய உயர்நிலைக்குழு கூட்டம் திருவனந்தபுரத்தில் நடந்தது. இதில் தமிழக முட்டை, கோழி களை நிபந்தனையுடன் இன்று (6ம் தேதி) மதியம் 12 மணிக்கு மேல் அனுமதிப்பது என முடிவு செய்யப்பட்டது. இதனால் சிக்கல் முடிவுக்கு வந்துள்ளது.

## நடப்பாண்டில் கோதுமை உற்பத்தி 10 கோடி டன்னை எட்டும்



மும்பை : நடப்பாண்டில் கோதுமை உற்பத்தி 10 கோடி டன்னை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. கோதுமை உற்பத்தியில் உலக அளவில் இந்தியா 2ம் இடம் வகிக்கிறது. கடந்த 6 ஆண்டுகளாக கோதுமை உற்பத்தி அதிகரித்து வருகிறது. இதையடுத்து, கோதுமை ஏற்றுமதிக்கான தடையை மத்திய அரசு கடந்த ஆண்டு செப்டம்பரில் விலக்கிக் கொண்டது.

இந்நிலையில், கடந்த ஆண்டில் 9.39 கோடி டன்னாக இருந்த கோதுமை உற்பத்தி, நடப்பாண்டில் 10 கோடி டன்னை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது குறித்து, கோதுமை ஆராய்ச்சித் துறை இயக்குனர் இந்து சர்மா கூறுகையில், 'பருவமழை தாமதமானதால், விவசாயிகள் மாற்று பயிராக கோதுமையை அதிகமாக பயிரிடலாம் என விவசாய அமைச்சர் பவார் கூறியிருந்தார். இதற்கேற்ப கோதுமை பாசன பரப்பு 5 சதவீதம் வரை கூடியுள்ளது. இதனால், உற்பத்தி இன்னும் அதிகமாகும்' என்றார்.

5th nov 2012 P.M

**விவசாயிகளுக்கு இலவச நெல் விதை**

மதுராந்தகம்,: பாக்கம் ஊராட்சியில் 132 விவசாயிகளுக்கு இலவச நெல் விதையை திட்ட அலுவலர் நதியா வழங்கினார்.

மதுராந்தகம் ஒன்றியம் பாக்கம் ஊராட்சியில் தாதங்குப்பம், வயலூர், பாக்கம் கிராமம், பாக்கம் காலனி ஆகிய பகுதிகள் உள்ளன. பாக்கம் ஊராட்சியில் வேலூர் மாவட்டம் விரிஞ்சிபுரம் வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில் திருந்திய நெல் சாகுபடி திட்ட முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நஞ்சை நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் அதற்குரிய ஆவணங்களை சமர்ப்பித்தால் அவர்களுக்கு தேவையான விதை, உரம், பூச்சி மருந்து போன்றவை இலவசமாக வழங்கப்படுகிறது.

நேற்று முன்தினம் விவசாயிகளுக்கு இலவச நெல் விதை வழங்கும் நிகழ்ச்சி பாக்கம் கிராமத்தில் நடந்தது. ஊராட்சி மன்ற தலைவர் மாசி தலைமை வகித்தார். துணைத் தலைவர் தெய்வசிகாமணி முன்னிலை வகித்தார். இதில் 132 விவசாயிகளுக்கு இலவச நெல் விதையை திட்ட அலுவலர் நதியா வழங்கினார்.